**கேள்வி மற்றும் பதில்கள்**

**முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்**

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்- ஏப்ரல் 2019**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கான வரைபானது 11 செப்ரெம்பர் 2018 அன்று அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் 9 ஒக்ரோபர் 2018 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட இச்சிறிய ஆவணமானது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் அடிக்கடி கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கான பதில்களை அளிப்பதாக அமைந்துள்ளது. அத்துடன் இவ்விடயம் தொடர்பாக ஆக்கப்பட்டுள்ள முன்னைய ஆவணங்களையும் ஆதரிப்பதாக அமைந்துள்ளது.[1]

**சர்வதேசக் கட்டமைப்பு**

1. **இலங்கையில் தற்போது பயங்கரவாதம் தொடர்பில் காணப்படுகின்ற சட்டக்கட்டமைப்பு யாது?**

- பயங்கரவாதத்தினை முறியடிப்பதற்கென தற்போது காணப்படுகின்ற பிரதான சட்டவாக்கங்களாக பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் என்பனவே காணப்படுகின்றன. எவ்வாறெனினும், பிணையெடுத்தல் தடுப்புச் சட்டம் மற்றும் கணிணிவழிக் குற்றச் சட்டம் போன்ற வேறு பல சட்டங்களும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றங்களை உள்ளடக்கியுள்ளன.
- அரசியலமைப்பின் உறுப்புரை 155 உடன் இணைத்து வாசிக்கின்றபோது, திடீர் மற்றும் உடனடி ஆபத்தொன்றினை நாடு எதிர்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் பிரயோகத்தினை ஏற்கமுடியும். "*பொதுமக்களின் பாதுகாப்பு பற்றிய அக்கறையின் நிமித்தம் மற்றும் பொது ஒழுங்கினை பாதுகாக்கும் நிமித்தம்*" ஜனாதிபதி சட்டத்தின் பிரிவு 5 இற்கு அமைவாக அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்த இயலும். அவசரகால நிலைமையினை பிரகடனப்படுத்தல் மற்றும் நிலைபேறுள்ள அவசரகால அதிகாரங்களின் பிரயோகம் தொடர்பான அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்டக் கட்டமைப்பானது மிகப் பழமையானவையாகக் காணப்படுகின்றன. இது நிறைவேற்று தற்துணிபிற்கு அனுமதியளிக்கின்ற அதேவேளை, தற்போது சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் ஒப்பீட்டுரீதியிலான அரசியலமைப்பு சட்டங்களில் குறிப்பிட்ட தரநிலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தினை, சமநிலைத்தன்மையுடன் பாதுகாப்பதற்கான காப்பீடுகளை கவனத்திலெடுக்கத் தவறியுள்ளது.
- பயங்கரவாதத் தடைச் சட்டமானது 1978 ஆம் ஆண்டு தற்காலிகப் பொறிமுறையாக இயற்றப்பட்டபோதும், அது 1982 ஆம் ஆண்டு நிரந்தர சட்டவாக்கமாக்கப்பட்டது. அது முன்னர் சாதாரண சட்டங்களினால் குற்றமாகக் கருதப்பட்டிராத விடயங்களைக் குற்றங்களாக்கியதுடன், அவை துஷ்பிரயோகப்படுத்தப்பட்டு அச்சட்டம் வலுவிலுள்ள இவ் 40 வருட காலமாக பாரிய மனித உரிமை மீறல்களை விளைவாக வருவித்திருந்தன.[2] மிகவும்

[1] Comparing the Proposed Counter Terrorism Bill to the Prevention of Terrorism Act ( CPA, October 2018) https://www.cpalanka.org/wp-content/uploads/2018/10/CTAPTA_final-.pdf

[2] Further for a detailed critique of the PTA see Asanga Welikala, 'A State of Permanent Crisis: Constitutional Government, Fundamental Rights and States of Emergency in Sri Lanka', Centre for Policy Alternatives, 2008 accessible at;<https://www.cpalanka.org/wpcontent/uploads/2009/5/States%20of%20Emergency%20(30%2010%202008).pdf>; See also Asanga Welikala, 'States of Emergency: Issues for Constitutional Design, CPA

குறிப்பாக, பிரிவு 2(1) (ஏ)[3] ஆனது நெறிமுறைத்தன்மை வாய்ந்த இணக்கமின்மையினை ஒழிப்பதற்காக மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளை இலக்கு வைப்பதற்காக பாரதூரமான முறையில் தவறாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத் தடைச் சட்டமானது மிக அவசரமாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதுடன் அது அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்த பல அடிப்படை உரிமைகளை குறைந்தளவான மேற்பார்வையோடு மீறத்தக்க தெளிவான பல ஏற்பாடுகளை[4] உள்ளடக்கியிருந்ததுடன் அது தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரத்திற்கு வழிவகுத்தது.[5]

## 2. பயங்கரவாதம் தொடர்பாக இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகள் யாவை?

- பயங்கரவாதத் தடைச் சட்டமானது மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு பிரச்சனைகளுக்கு வித்திட்டுள்ளதுடன் அதிகமானளவில் விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளது. யுத்தம் நிறைவுற்ற பின்னரும்கூட, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வந்ததுடன், அதன் கீழ் 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட விதிமுறைகளானவை உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டன.[6] கடந்த காலங்களில் இச்சட்டத்தை ரத்து செய்யுமாறு தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை ஒழுங்கமைப்புக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்தன.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை ரத்து செய்து ஒரு புதிய சட்டவாக்கத்தினை கொண்டுவருவதற்கான கோரிக்கை, இலங்கை அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 30/1 என்ற தீர்மானத்தினை நிறைவேற்றியதனைத் தொடர்ந்து மேலும் வலுவடைந்தது. தீர்மானத்தின் 12 ஆம் பந்தியானது பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

  ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது:

  *''பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலீடாக, சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை உருவாக்குவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பினை வரவேற்கின்றது.''*

- 21 மார்ச் 2019 அன்று நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் 40/1 இனூடாக தீர்மானம் 30/1 இன் கீழ் உடன்பட்டுக்கொண்டவற்றை நிறைவேற்றுவதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்து செய்து சமகால சர்வதேச சிறப்பு

---

Working Papers on Constitutional Reform no. 5, August 2016, accessible at <https://www.cpalanka.org/wpcontent/uploads/2016/08/States-of-Emergency-Working-Paper5.pdf>

[3] பிரிவு 2 (1) (ஏ)- எந்தவொரு நபரும் தன்னுடைய வார்த்தைகளாலோ அல்லது எதனையேனும் வாசிப்பதன் மூலமாக அல்லது ஏதேனும் சமிக்ஞைகள் மூலமாக அல்லது ஏதேனும் பார்க்கக்கூடியதான எடுத்துரைப்புக்களினால் அல்லது வேறேதேனுமொரு வழிமுறையில் மத, இன அல்லது சமூக ஒற்றுமையின்மையை அல்லது தீய நோக்கிலான உணர்வுகள் அல்லது வேறுபட்ட சமூகங்கள் அல்லது இன அல்லது மதக் குழுக்களுக்கிடையில் பகைமையை ஏற்படுத்தும் அல்லது வன்முறை நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றபோது அல்லது அத்தகைய எண்ணத்துடன் அவை செய்யப்படுகின்றபோது;

[4] Welikala (n 2)

[5] Ibid.

[6] CPA Statement on the new Regulations under the Prevention of Terrorism Act, <https://www.cpalanka.org/wp-content/uploads/2011/09/CPA-Statement-on-the-newRegulations-under-the-Prevention-of-Terrorism-Act.pdf>

நடைமுறைகளுடன் இணங்கக்கூடியதான ஒரு சட்டவாக்கத்தினூடாக பதிலீடு செய்கின்ற உடன்பாடும் இதனுள் உள்ளடங்கும்.

- ஐக்கிய நாடுகள் பொது சபையின் (ஐ.நா பொது சபை) ஆறாவது குழுவின் 73ஆவது அமர்வுகள் ஒக்ரோபர் 2018 இல் இடம்பெற்றபோது, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதநிதியான கலாநிதி. ரொஹான் பெரேரா சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான முழுமையான சமவாயமொன்றினை (அனைத்து வடிவங்களிலுமான சர்வதேச பயங்கரவாதத்தினை குற்றமாக்க எண்ணியுள்ள உத்ததேசிக்கப்பட்ட ஒப்பந்தம்) ஏற்றுக்கொள்வதற்கான தேவையினை எடுத்துக்கூறியதுடன் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான முயற்சியில் இலங்கையில் முழுமையான ஒத்துழைப்பினை உறுதி செய்தார்.[7]
- அண்மையில் இடம்பெற்ற பிரசெல்சு இன் இணை ஆணைக்குழுவின் 22 ஆவது கூட்டத்திற்கு பின்னர் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் இணைந்து ஒரு கூட்டறிக்கையினை வெளியிட்டன. அவ்வறிக்கையில் இலங்கையானது 27 சர்வதேச சமவாயங்களின் கீழான உடன்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருவதாக அவதானிக்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்து செய்து விட்டு அதனை சர்வதேச நியமங்களுடன் இணங்கக்கூடிய வகையிலான வேறொரு சட்டவாக்கத்தினூடாகப் பதிலீடு செய்ய வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் மீள எடுத்துரைத்திருந்தது.[8]

### 3. பயங்கரவாதத்தினை எதிர்த்தல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாடு யாது?

சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான பொறிமுறைகள் மீதான முதலாவது பிரகடனமானது 1994 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐ.நா பொது சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.[9] அதன் பின்னர், ஐ.நா பொது சபையானது பயங்கரவாதத்தை முறியடிப்பதுடன் தொடர்புடைய பல்வேறு தீர்மானங்களை ஏற்றுக்கொண்டது. அவை கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

- 1996 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், பயங்கரவாத குண்டு வீச்சு மற்றும் அணு ஆயத பயங்கரவாதம் என்பனவற்றை முடக்குவது தொடர்பில் ஏற்கனவே காணப்படுகின்ற சர்வதேச ஆவணங்களிலுள்ள இடைவெளியினைக் குறைக்கக்கூடிய சர்வதேச சமவாயங்கள் குறித்து ஆராய்வதற்கான ஓர் தற்காலிக குழு ஸ்தாபிக்கப்பட்டது.[10]
- 1999 இல், ஐ.நா பொது சபையின் ஆறாவது (சட்ட) குழுவில், 1996 இல் ஸ்தாபிக்கப்பட்ட தற்காலிக குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான ஒரு பணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.[11]
- பாதுகாப்பு சபையின் தீர்மானம்- 1373 இனால் பயங்கரவாத எதிர்ப்புக்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன் இது 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 இல் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து செப்ரெம்பர் 28 ஆம் திகதி ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது

---

[7] See: <https://www.un.int/srilanka/statements_speeches/statement-he-dr-rohan-pereraambassador-and-permanent-representative-sixth>

[8] Daily FT, “Adhering to international conventions crucial to GSP +EU) ( Daily FT, 16 February 2019) http://www.ft.lk/top-story/Adhering-to-intl--conventions-crucial-to-GSP---EU/26-672988

[9] United Nations General Assembly Resolution 49/60 of 9 December 1994, see: <http://legal.un.org/avl/ha/dot/dot.html>

[10] United Nations General Assembly Resolution 51/210 of 17 December 1996, see: <http://www.un.org/en/ga/search/view_doc.asp?symbol=A/RES/51/210>

[11] United Nations General Assembly Resolution 54/10

ஐ.நாவின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பயங்கரவாதத்திற்கு எதிராக உடன்பட வைத்தது.[12]

- 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஐ.நா பொதுச்சபை உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு உபாயத்தினை ஏற்றுக் கொண்டது.[13] இவ் உபாயத்தின் பிரதான ஆக்கக்கூறுகளுள் ஒன்றாக அமைவது யாதெனில், சர்வதேச பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் குற்றமாக்குவதற்கான சர்வதேச பயங்கரவாதம் மீதான ஒரு முழுமையான சமவாயத்தினை நிறைவு செய்தமையாகும்.[14]
- 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான ஐ.நா அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது.[15]
- 2018 ஜூனில் ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு உபாய மீளாய்வு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தீர்மானமானது, பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான பல்வேறுபட்ட முயற்சிகளின் முக்கியத்துவம் மற்றும் சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா பட்டயத்தின் கொள்கைகளுடன் முரண்படுகின்ற நடைமுறைகளை அல்லது பொறிமுறைகளை தவிர்த்துக்கொள்வதன் முக்கியத்துவம் என்பனவற்றை வலியுறுத்திக்காட்டுகின்றது.[16]
- 2018 டிசெம்பரில், ஐ.நா செயலாளர் நாயகம் அன்டனியோ குட்டாரஸ் ஐ.நா உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தினை (ஐ.நா செயலாளர் நாயகம் மற்றும் பன்னாட்டுக் காவலகத்துடன் 36 ஐ. நா நிறுவனங்கள் மற்றும் உலக சுங்க ஒழுங்கமைப்பு என்பவற்றுக்கிடையிலான ஒப்பந்தம்) தொடக்கி வைத்தார். பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான கூட்டு அணுகுமுறையினை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இவ் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.[17]

## 4. ஏன் இலங்கைக்கு அரசியலமைப்பு மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவானதொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவாக்கம் தேவைப்படுகிறது?

- இலங்கை சுமார் 30 வருட காலமாக கொடூரமான ஒரு யுத்தத்தினைச் சந்தித்திருந்தது என்பதுடன் அவ் யுத்தம் பத்து வருடங்களுக்கு முன்னர் நிறைவுபெற்றது. யுத்தம் நிறைவு பெற்று சுமார் ஒரு தசாப்தம் நிறைவுபெற்றபின்னரும் கூட தேசிய பாதுகாப்பு என்பது தற்போதும் முக்கிய பிரச்சனையொன்றாகக் காணப்பட்டு வருகின்றது. இது சர்வதேச பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத ஒழுங்கமைப்புக்களின் வளர்ச்சி மற்றும் இலங்கையர்கள் அப்பயங்கரவாத குழுக்களில் இணைந்துள்ளனர் என்ற அறிக்கைகளின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை என்பவற்றால் மேலும் வலுப்படுகின்றது.[18]
- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றங்களின் சில அம்சங்களைக் கையாள்வதற்கான சில சட்டங்கள் நடைமுறையிலிருக்கின்றபோதிலும் கூட, புதிய மற்றும் எதிர்பாராத திடீர் பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் தேசிய

[12] United Nations Security Council Resolution 1373 (2001) <http://www.un.org/ga/search/view_doc.asp?symbol=S/RES/1373(2001)>

[13] See for further information <https://www.un.org/counterterrorism/ctitf/en/un-global-counterterrorism-strategy> The United Nations Global Counter-Terrorism Strategy <https://documentsdds-ny.un.org/doc/UNDOC/GEN/N05/504/88/PDF/N0550488.pdf?OpenElement>

[14] Ibid.

[15] United Nations General Assembly Resolution 71/291 of 15 June 2017, see: <http://www.un.org/en/counterterrorism/>

[16] <https://news.un.org/en/story/2018/06/1013132, General Assembly Unanimously Adopts Resolution Calling for Strong Coordinated Action by Member States to Tackle Terrorism, Violent Extremism Worldwide <https://www.un.org/press/en/2018/ga12035.doc.htm>

[17] Coordination and coherence of the counter-terrorism efforts of the United Nations https://www.un.org/counterterrorism/ctitf/en/about-task-force

[18] Sri Lanka says 32 'elite' Muslims have joined Islamic State in Syria ( Reuters , 18th November 2016) <https://www.reuters.com/article/us-mideast-crisis-syria-sri-lanka-idUSKBN13D1EE>

பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளைக் கையாள்வதற்கான முழுமையான பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பொன்றை சர்வதேச நியமங்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு அமைவாக உருவாக்க வேண்டிய அவசியமிருப்பதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறித்துக் கொள்கிறது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் அவசியமான காப்பீடுகள் மற்றும் மேற்பார்வையினைக் கொண்டிருக்க வேண்டுமென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மீள எடுத்துரைக்கின்றது.[19]

- இலங்கையின் வரலாற்றைக் கவனத்திற்கொண்டு பார்க்கின்றபோது, எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவாக்கமும் அல்லது அந்நோக்கத்திற்கான வேறு ஏதேனும் சட்டமும் துஷ்பிரயோகப்படுத்தப்படலாம் என்பதுடன் அது தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரத்தினை வலுப்படுத்தலாம் என்கின்ற அதேவேளை, தற்போது வரைபாக உள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை சர்வதேச விழுமங்களுக்கு அமைவாக மேம்படுத்துவது தொடர்பான செயற்பாடுகளில் பயனுரித்தாளிகள் ஈடுபடுவதற்கான ஒரு வாய்ப்பு தற்போது கிடைத்துள்ளது. குறிப்பாக, ஒப்பீட்டளவில் தற்போதைய அரசாங்கம் சர்வதேச மற்றும் தேசிய அழுத்தங்களை ஏற்று அங்கீகரிப்பதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது இது ஒரு சிறந்த வாய்ப்பாக உள்ளது.
- எவ்வாறெனினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திலுள்ள காப்பீடுகளை மற்றும் மேலதிக கண்காணிப்பு பொறிமுறைகளை பலப்படுத்தல் போன்ற மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முன்மொழிவுகள் மாத்திரம் முறையான மனித உரிமை தரநிலைகளை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு போதுமானதல்ல. இதற்கு, முழு குற்றவியல் நீதி முறைமையினையும் திருத்தக்கூடிய பரந்தளவான திருத்தங்கள் அவசியமாகும். குறிப்பாக, தகைமை மற்றும் விழிப்புணர்வு போன்ற விடயங்களை கையாள்வது உள்ளடங்கலாக பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதித்துறை ஆகிய அனைத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

## 5. பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் வரைபுச் செயன்முறை தொடர்பாகக் காணப்படுகின்ற கரிசனைகள் யாவை?

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக புதிய ஒரு சட்டவாக்கத்தினை வரைவதற்கான ஒரு குழுவொன்றினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஸ்தாபித்தார். உத்தேசிக்கப்பட்ட பங்கரவாத எதிர்ப்புச் சட்டவாக்கமானது கடந்து மூன்று வருடங்களாக மூடப்பட்ட கதவுகளுக்குள் ஆழ்ந்த கவனத்திலெடுக்கப்பட்டது. இக்காலப்பகுதியின்போது எவ்விதமான பொதுமக்கள் கலந்தாலோசனைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே இச்செயன்முறையானது வெளிப்படைத்தன்மையற்றதாக உள்ளது.
- சட்டவாக்கங்கள் உருவாக்கப்படும்போது அவை சர்வதேச மனித உரிமை நியமங்கள் மற்றும் தரநிலைகளுக்கு அமைவாக உருவாக்கப்படுதல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கான அதிகாரம் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உள்ளது (1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 10(இ) மற்றும் (ஈ) இனைப் பார்க்க) என்றபோதிலும், இச்சட்டவாக்க வரைவுச் செயன்முறையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் எவ்வித கலந்தாலோசனைகளும் மேற்கொள்ளப்படவில்லை.
- எவ்வாறெனினும், மிகவும் அண்மையில், சர்வதேச உறவுகளுக்கான துறைசார் மேற்பார்வை குழுவினூடாக சிவில் சமூக ஒழுங்கமைப்புக்கள் மற்றும் வேறு பல பயனுரித்தாளிகளுடன் ஈடுபடுவதற்கான முயற்சி அரசாங்கத்தினால்

[19] Comparing the Proposed Counter Terrorism Bill to the Prevention of Terrorism Act ( CPA, October 2018) https://www.cpalanka.org/wp-content/uploads/2018/10/CTAPTA_final-.pdf, Initial Comments On The Proposed Counter Terrorism Bill <https://Www.Cpalanka.Org/Initial-Comment-On-The-Proposed-CounterTerrorism-Bill/>, CPA submissions to the Sectoral Oversight Committee on (International Relations)

மேற்கொள்ளப்பட்டது என்பதுடன் வெளிநாட்டு விவகாரங்களுக்கான அமைச்சரினால் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது.

**முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் பிரதான ஏற்பாடுகள்**

**6. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் குறிக்கப்பட்டுள்ள குற்றங்கள் யாவை?**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் பல்வேறு வாசகங்களினால் விஸ்தாரப்படுத்தப்படுகின்றன என்பதுடன் அவை கீழ்வருமாறு வகைப்படுத்தப்படலாம்:

வாசகம் 3 & 4- பயங்கரவாதக் குற்றம் மற்றும் பயங்கரவாதக் குற்றத்திற்கான தண்டனை

வாசகம் 5- பயங்கரவாதக் குற்றத்தை செய்ய எத்தனிப்பதற்கான தண்டனை

வாசகம் 6 & 11- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் மற்றும் அத்தகைய குற்றங்களுக்கான தண்டனைகள்

வாசகம் 12- பிரிவு 6 இன் கீழான குற்றமொன்றை செய்ய எத்தனிப்பதற்கான தண்டனை

வாசகம் 7- குறிப்பிடப்பட்ட பயங்கரவாதச் செயல்கள்

வாசகம் 8- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய மோசமான குற்றவியல் செயல்கள்

வாசகம் 9- பயங்கரவாதம் தொடர்புடைய செயல்கள்

வாசகம் 10- பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கின்ற செயல்கள்

வாசகம் 13- தகவல்களை வழங்கத் தவறுகின்றமை குற்றமொன்றாக்கப்பட்டுள்ளது

வாசகம் 14- சட்டரீதியான கட்டளைகளை மதிக்கத்தவறுகின்றமை குற்றமொன்றாக்கப்பட்டுள்ளது

**7. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் 3 ஆவது வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாதக் குற்றம் என்பதன் பரப்பு யாது?**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் வாசகம் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாதக் குற்றமானது பயங்கரவாதக் குற்றங்களுக்கான குற்றமனம் (குற்றத்தின் ஒரு பாகமாகவுள்ள தவறைப் புரிவதற்கான எண்ணம் அல்லது அறிவு) மற்றும் குற்றச்செயல் (குற்றத்தின் ஒரு கூறாகவுள்ள செயல் அல்லது நடத்தை) என்பனவற்றைத் தனித்தனியாகக் குறிப்பிட்டுள்ளது. இதனை ஒன்றிணைத்து வாசிக்கின்றபோதுதான் உத்தேசிக்கப்பட்ட சட்டத்தின் கீழான குற்றம் உருவாகின்றது. அதன்படி வாசகம் 3 (1) ஆனது, நான்கு குறிப்பான எண்ணங்களைக் கொண்டுள்ளது:

அ) சனத்தொகையை அச்சுறுத்தல்

ஆ) ஏதேனும் ஒரு விடயத்தை செய்யும்படி அல்லது ஒரு விடயத்தை செய்வதனைத் தவிர்க்கும்படி இலங்கை அரசாங்கத்தினை அல்லது வேறு ஏதேனும் அரசாங்கத்தை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பொன்றினைக் கட்டாயப்படுத்தல்

இ) அத்தகைய அரசாங்கமொன்று செயற்படுவதைத் தடைசெய்தல்

ஈ) இலங்கையின் அல்லது வேறு ஒரு இறைமையுள்ள நாட்டின் ஆள்புல கௌரவம் அல்லது இறைமைக்கு ஊறு விளைவித்தல்,

முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் ஒரு சந்தேக நபர் மேற்கூறப்பட்ட ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணத்தினைக் கொண்டிருக்கும்போது மற்றும் வாசகம் 3 (2) (அ) முதல் (ஓ) வரை குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் ஒன்று அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட செயல்களை புரிந்துள்ளபோதுதான் ''பயங்கரவாதக் குற்றமொன்றை'' புரிந்ததாகக் கருதப்படும்.

உதாரணம்: அரசாங்கத்தின் செயற்பாட்டைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் (வாசகம் 3(1)(ஆ)) கொலை செய்கின்றபோது, கொலை செய்ய எத்தனிக்கின்றபோது அல்லது பாரிய காயத்தை ஏற்படுத்துகின்றபோது, பிணைக்கைதிகளை பிடிக்கின்றபோது அல்லது எவரையேனுமொருவரைக் கடத்தல் (வாசகம் 3 (2) (அ)). அரசின் தலைவரை கொலை செய்தல், புகழ்பெற்ற ஒருவரைக் கடத்தல் மற்றும் அதுபோன்ற சந்தர்ப்பங்கள் இக்குற்றத்திற்குள் உள்ளடக்கப்படும்.

## 8. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் யார் கைது செய்ய முடியும் மற்றும் யார் தடுத்து வைக்கமுடியும்?

**(வாசகம் 17)** இன் கீழ், எந்தவொரு பொலிஸ் அதிகாரி, ஆயுதப் படைகளின் அதிகாரி அல்லது உறுப்பினர் அல்லது கடலோர பாதுகாப்பு படை உறுப்பினர் பிடியாணையின்றி கீழ்வரும் சந்தர்ப்பங்களில் கைது செய்ய இயலும்:

- அவ் அலுவலரின் முன்னிலையில் ஒரு நபர் குற்றமொன்றினைப் புரிகின்றபோது அல்லது சட்டத்தின்கீழ் ஒரு நபர் ஒரு குற்றத்தைப் புரிந்துள்ளார் என்பதனை நம்புவதற்கான நியாயமான காரணங்கள் காணப்படுகின்றபோது,
- ஒரு நபர் சட்டத்தின்கீழ் குற்றமொன்றினைப் புரிந்துள்ளபோது,
- ஒரு நபரொருவர் சட்டத்தின்கீழான குற்றமொன்றினைப் புரிந்துள்ளார் அல்லது அக்குற்றத்துடன் தொடர்புற்றுள்ளார் என்பது தொடர்பாக அலுவலரொருவருக்கு தகவல் அல்லது முறைப்பாடொன்று (அவர் நம்பத்தகுந்தது என கருதுகின்ற) கிடைக்கப்பெறுகின்றபோது,
- சட்டத்தின்கீழ் குற்றமொன்றினை புரிந்தபின்னர் ஒரு நபர் கைதிலிருந்து தப்பிப்பதற்காக இலங்கையை விட்டு தப்பிச்செல்கின்றபோது அல்லது கைதிலிருந்து தப்பிக்கின்றபோது,
- இச்சட்டத்தின்கீழ் குற்றமொன்றினைப் புரிந்துள்ளார் என சந்தேகிக்கப்படுகின்ற நபர் அவர் விடுவிக்கப்பட்ட பிணை நிபந்தனைகளுக்கு முரணாக செயற்படுகின்றபோது.

## 9. பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின்கீழ் நீதவான் நீதிமன்ற நீதவானின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் யாவை?

- அவருக்கு முன்னிலையில் அடைத்துவைப்பிற்கான ஆணை வழங்கப்படும்போது அதற்கான வலிதுடைமையினை அளித்தல். **(வாசகம் 27)**
- நீதவான் முன்னிலையில் அடைத்துவைப்பிற்கான ஆணை வழங்கப்பட்டிருக்கவில்லையாயின், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கோரிக்கையின் அடிப்படையில் சந்தேகநபரை காவலில் வைத்திருக்கலாம், பிணையில் விடுதலை செய்யலாம் அல்லது விடுவிக்கலாம். **(வாசகம் 27)**
- சித்திரவதை இடம்பெற்றுள்ளமைக்கான சந்தேகமொன்று எழுமாயின், தடயவியல் மருத்துவ சோதனையொன்றினை செய்யுமாறு சந்தேகநபரை வழிநடத்தல். **(வாசகம் 28)**
- சந்தேக நபர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், சந்தேக நபர் அடைத்துவைக்கப்பட்டிருந்த இடத்திற்கு விஜயம் செய்தல் மற்றும் சந்தேக நபரை நேர்காணல் செய்தல் மற்றும் அவருடைய நலனைப் பரிசோதித்தல். **(வாசகம் 32)**

- எந்தவொரு நீதவானும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி தடுத்து வைத்திருக்கும் இடங்களுக்கு விஜயம் செய்வதற்கு, அவற்றை பரீட்சிப்பதற்கு மற்றும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களை நேர்காணல் செய்வதற்கு இயலும். **(வாசகம் 35)**
- சந்தேக நபரைக் கேள்வி கேட்டல் மற்றும் வாக்குமூலமொன்றைப் பதிவு செய்து கொள்ளல். **(வாசகம் 68)**
- சந்தேக நபரிடமிருந்து வாக்குமூலமொன்றைப் பதிவு செய்து கொள்வதற்கு முன்பும் மற்றும் பின்பும் சந்தேகநபர் அரசாங்க தடயவியல் மருத்துவ விசேட நிபுணரொருவரால் பரீட்சிக்கப்படுவதனைச் சாத்தியமாக்கல். **(வாசகம் 80)**
- தொலைத்தொடர்பாடல் ஒழுங்கு நிலையம், செயற்கைகோள் தொடர்பு அல்லது டிஜிட்டல் சேவை அல்லது தரவு சேவை வழங்குனர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்ற விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் மற்றும் விசாரணைகளை நடத்துவது நியாயமானதாக மற்றும் அவசியமானதாக உள்ளவிடத்து அதற்கான ஆணைகளை வழங்குதல். **(வாசகம் 64)**
- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் விண்ணப்பத்தின்பேரில் விசாரணைகளை சாத்தியப்படுத்துவதற்கான குறிப்பிட்ட சில ஆணைகளை விதித்தல். **(வாசகம் 66)**
- பொலிஸ் மேற்பார்வையாளரின் விண்ணப்பத்தின்பேரில் தரவுகள் மற்றும் தகவல்களை வெளிப்படுத்த அதிகாரமளிக்கின்ற ஆணைகளை மேற்கொள்ளுதல். **(வாசகம் 67)**

**10. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் யாவை?**

- "*அடைத்து வைத்திருப்பதற்கான அனுமதியளிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள்*" தொடர்பில் பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சருக்கு பரிந்துரைகளை வழங்குதல். **(வாசகம் 31 (7))**
- 72 மணித்தியாலங்களுக்கு மேற்படாது மற்றும் நடைமுறையில் சாத்தியமானளவு விரைவாக அடைத்து வைப்பு தொடர்பாக அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அடைத்துவைப்பிற்கான ஆணையின் பிரதியொன்று அவர்களுக்கு விரைவாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். **(வாசகம் 33)**
- தடுப்புக்காவலிலிருந்து அல்லது அடைத்து வைப்பிலிருந்து சந்தேக நபரை விடுதலை செய்கின்ற சந்தர்ப்பத்தில் பிரசன்னமாகியிருத்தல். **(வாசகம் 43)**
- சந்தேக நபர் அடைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தின் நிலைப்பாடுகள் மனிதாபிமானமற்றவையாக உள்ளன என பொலிஸ்மா அதிபர் அல்லது சிறைச்சாலைகள் மேற்பார்வையாளருக்கு அறிவிப்பதற்கான அதிகாரம். **(வாசகம் 48 (2))**
- சந்தேக நபரொருவர் ஒரு மாத காலப்பகுதிக்கு மேலாக அடைத்து வைக்கப்பட்டிருப்பின் அல்லது விளக்கத்தின் தொடக்கம் அல்லது முடிவு நிலுவையிலுள்ளமையினால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளபோது அது குறித்து அறிவிக்கப்படுதல் வேண்டும். **(வாசகம் 48 (4))**
- பிரிவு 62 இன் கீழ் பொலிஸ் அதிகாரியொருவர் பொது ஒழுங்கிற்கான வழிகாட்டிகளை வெளியிடுகின்றபோது அது குறித்து அறிவிக்கப்படுதல் வேண்டும். **(வாசகம் 62(2))**
- பிரிவு 83 இன்கீழ் ஊரடங்குச்சட்டம் விதிக்கப்படுமாயின் அது குறித்து உடனடியாக அறிவிக்கப்படுதல் **(வாசகம் 83(7))**
- நிறைவுபெற்ற விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றபோது மற்றும் மேலதிக விசாரணைகள் நிறைவடைகின்றபோது அது தொடர்பாக அறிவிக்கப்படுதல். **(வாசகம் 69 (3))**

11. **பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் பொலிஸாரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் யாவை?**

- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறு எவரேனுமொரு பொலிஸ் அலுவலர் விசாரணைகளை ஆரம்பிக்க இயலும் மற்றும் நடாத்த இயலும். **(வாசகம் 16)**

- எந்தவொரு பொலிஸ் அதிகாரியும் கைது செய்வதற்கான பிடியாணை இன்றி கைது செய்ய இயலும். **(வாசகம் 17)**

- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு எவரேனுமொரு பொலிஸ் அலுவலர் சந்தேக நபரிடம் தெரியக்கூடியதாக உள்ள ஏதேனும் காயங்கள் உள்ளதா என பரிசீலனை செய்ய முடியும் என்பதுடன் சந்தேக நபர் சட்ட மருத்துவ அதிகாரியினால் பரீட்சிக்கப்பட வேண்டும் என வழிநடத்த இயலும். **(வாசகம் 24)**

- சந்தேக நபர் அடைத்து வைத்திருக்கப்படும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அத்தகைய கைது மற்றும் அடைத்து வைப்பு குறித்து நடைமுறையில் முடியுமானளவு விரைவாக மற்றும் கைது செய்யப்பட்டதிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தல் வேண்டும். **(வாசகம் 25 (4))**

- பொலிஸ்மா அதிபர் கைது, அடைத்து வைப்பு, தடுப்புக்காவல், பிணை போன்றன தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய ஒரு மத்திய தரவுத்தள பதிவேடொன்றினை ஸ்தாபித்து அதனைப் பேண வேண்டும். **(வாசகம் 26)**

- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு விண்ணப்பமொன்றை செய்வதன்பேரில், பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்தேக நபர் குற்றம் இழைத்துள்ளார் என திருப்தியடைகின்ற பட்சத்தில் அடைத்துவைப்பதற்கான ஆணையினை வழங்குவார். **(வாசகம் 31)**

- சந்தேக நபர் அடைத்து வைத்திருக்கப்படும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அத்தகைய அடைத்து வைப்பு குறித்து 72 மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். **(வாசகம் 33)**

- இச்சட்டத்தின் கீழான குற்றமொன்று நிகழ்வதனைத் தடுப்பதற்கு அவசியமான பொறிமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென ஒவ்வொரு பொலிஸ் அதிகாரியும் தேவைப்படுத்தப்படுகின்றார். **(வாசகம் 50)**

- பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்ற பதவிநிலைக்கு குறையாத பதவிநிலையினைக் கொண்டுள்ள பொலிஸ் அதிகாரியொருவர் எந்தவொரு ஆயுதப்படையினதும் உறுப்பினர்கள்/ மருத்துவர்கள் மற்றும் சுகாதார நல பணியாளர்கள் மற்றும் அவசியமான வேறு நபர்களைக் கொண்ட துணை குழுக்களை உருவாக்கலாம். **(வாசகம் 53)**

- பொலிஸ்மா அதிபர் விசேட விசாரணையாளர்கள் குழுவொன்றை நியமிக்கலாம். **(வாசகம் 52)**

- பொலிஸ் துணை இன்ஸ்பெக்டர் என்ற பதவிநிலைக்கு குறையாத பதவிநிலையினைக் கொண்டுள்ள மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால்

விசாரணை செய்வதற்கான அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனுமொரு பொலிஸ் அதிகாரியொருவர் எவரேனும் நபரொருவரை நேர்காணலுக்கு வருகைதரும்படி, அவரிடம் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி, தகவல்களை வழங்கும்படி, வாக்குமூலங்களை வழங்குபம்படி தேவைப்படுத்துவதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருப்பார். **(வாசகம் 54)**

**12. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் அமைச்சரின் (சட்டம் மற்றும் ஒழுங்கிற்கான அமைச்சர்) அதிகாரங்கள் மற்றும் கடமைகள் யாவை?**

- பொலிஸ்மா அதிபரின் விதந்துரையின்பேரில் குறிப்பிட்ட எண்ணிக்கையான இடங்களை ''*அடைத்துவைப்பிற்கான அனுமதியளிக்கப்பட்ட இடங்களாக*'' குறிப்பிடுதல். **(வாசகம் 31 (6))**

- பொலிஸ்மா அதிபர் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி ''*அடைத்துவைப்பிற்கான அனுமதியளிக்கப்பட்ட இடங்களில்*'' காணப்பட வேண்டிய நிலைப்பாடுகளை குறிப்பிடுதல். **(வாசகம் 31 (7))**

- 31 ஆம் வாசகத்திற்கு அமைய, மீளாய்வு சபைக்கு போதுமான தகைமைகளைக் கொண்டுள்ள இரண்டு நபர்களை நியமித்தல்.[20] **(வாசகம் 41)**

- ஒரு ஒழுங்கமைப்பொன்று சட்டத்தின் கீழான ஏதேனுமொரு தவறை புரிகின்றது அல்லது இலங்கை அல்லது வேறொரு நாட்டின் தேசிய அக்கறைக்கு பங்கம் விளைவிக்கின்ற கூடிய வகையில் செயற்படுகின்றது என நம்புவதற்கான போதுமான காரணங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், அமைச்சர் அத்தகைய ஒழுங்கமைப்புக்களைத் தடை செய்ய இயலும். **(வாசகம் 81)**

- பாதிக்கப்பட்ட தரப்பின் விண்ணப்பத்தின்பேரில் ஒழுங்கமைப்பு மீது விதிக்கப்பட்டிருக்கின்ற தடையினை இரத்து செய்தல் அல்லது மீளாய்வுச் செய்தல். **(வாசகம் 81 (6))**

- பொலிஸ்மா அதிபரின் பரிந்துரையின்பேரில் நபரொருவர் சட்டத்தின் கீழான குற்றமொன்றை புரிந்துள்ளார் அல்லது புரிவதற்கு முயற்சி செய்கின்றார் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுகின்றபோது மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன் ''கட்டுப்பாட்டு ஆணையினை'' வழங்குதல். **(வாசகம் 82)**

- பொலிஸ்மா அதிபர் அல்லது இராணுவத்தளபதி, கடற்படைத்தளபதி அல்லது விமானப்படைத்தளபதி அல்லது கடலோர பாதுகாப்பு படையின் பணிப்பாளர் நாயகம் என்போருடைய பரிந்துரையின்பேரில் எந்தவொரு இடத்தை அல்லது அமைவிடத்தை ''தடை செய்யப்பட்ட பிரதேசமாக'' பிரகடனப்படுத்தல். **(வாசகம் 84)**

- இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அமுலாக்கப்படவேண்டிய முறைமை குறித்த வழிகாட்டல்களை பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஆயுதப் படைகளின் அலுவலர்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை வழங்குதல். **(வாசகம் 93)**

[20] முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் 41 ஆவது வாசகமானது வாசகம் 31 இன்கீழ் செய்யப்பட்டுள்ள அடைத்துவைப்பிற்கான ஆணை தொடர்பான நிர்வாக நிவாரண மேன்முறையீடுகளை வழங்குவதற்காக மீளாய்வு சபையொன்றினை ஸ்தாபிக்கின்றது.

- புனருத்தாபன நிகழ்ச்சித்திட்டங்களின் அமுலாக்கம் தொடர்பான பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு வழங்கல். **(வாசகம் 94)**

**13. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் கடலோர பாதுகாப்பு படையினரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் யாவை?**

- இச்சட்டத்தின் கீழான குற்றமொன்றை இழைக்கின்ற நபரை கைது செய்வதற்கான பிடியாணை இன்றி கைது செய்ய இயலும். **(வாசகம் 17)**

- பொலிஸ் அலுவலரொருவர் நபரொருவரை கைது செய்வதற்கு உதவியளித்தல். **(வாசகம் 19)**

- இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு முரணாகச் செயற்படக்கூடிய நபரொருவரைத் தடுத்து வைத்தல் அல்லது தேடுதல். **(வாசகம் 62)**

- பொது ஒழுங்கினைப் பாதுகாத்தல் என்ற நோக்கத்திற்காக அழைக்கப்பட்டுள்ள ஆயுதப்படை உறுப்பினர்கள் குற்றவியல் நடபடிமுறை கோவையின் அத்தியாயம் XI இல் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்களைத்தவிர இச்சட்டம் மற்றும் வேறேதேனும் எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேடுதல் மற்றும் கைது செய்வது தொடர்பாக பொலிஸாருக்கு காணப்படுகின்ற அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருப்பார்கள். எவ்வாறெனினும், பகிரங்க இடங்களிலுள்ள நபர்களிடமிருந்து தாக்குதலுக்கான ஆயுதங்கள் மற்றும் பொருட்களை கைப்பற்றுதல் மற்றும் நீக்குதல் போன்ற விடயங்கள் குறிப்பிட்ட பதவிநிலைக்கு மேலுள்ள அதிகாரிகளினால் மாத்திரமே செய்யப்படவியலும். **வாசகம் 85(4)**

**14. துஷ்பிரயோகம், சித்திரவதை, மோசமான நடாத்துகை, காணாமற்போதல்களைத் தடுக்கும்பொருட்டு முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் காணப்படுகின்ற பாதுகாப்பு பொறிமுறைகள் யாவை?**

- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது அவரால் அங்கீகாரமளிக்கப்படுகின்ற வேறு எவரேனுமொரு பொலிஸ் அலுவலர் சந்தேக நபரிடம் தெரியக்கூடியதாக உள்ள ஏதேனும் காயங்கள் உள்ளதா என பரிசீலனை செய்ய முடியும். **(வாசகம் 24)**

- சந்தேகநபர் ஆஜர்படுத்தப்படுகின்ற நீதவான் சந்தேக நபருடனான தனிப்பட்ட சந்திப்பின் மூலமாக அவருடைய நலனை பரிசீலனை செய்ய முடியுமென்பதுடன் சந்தேக நபர் கூறுகின்ற எக்கருத்தினையும் பதிவு செய்ய இயலும். **(வாசகம் 27(2))**

- சந்தேக நபர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என நீதவான் சந்தேகிக்கின்றபோது அவர் சந்தேகநபர் அரசாங்க தடயவியல் மருத்துவ விசேட நிபுணரொருவரால் பரீட்சிக்கப்பட வேண்டுமென வழிநடத்தல். அத்தகைய மருத்துவ நிபுணரின் அறிக்கை குறிப்பிட்ட சந்தேக நபர் சித்தரவதைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாக தெரிவிப்பின், சந்தேக நபர் மற்றும் பொலிஸ் அதிகாரிக்கு அவர்களுடைய கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்பொன்றினை அளித்தபின்னர், சந்தேக நபரை அவசியமான சிகிச்சைக்கு உட்படுத்துமாறு மற்றும் தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட இயலும். அதற்கு முன்னர் அவரை அணுகிய பொலிஸ் அதிகாரிகள் அவரைத் தொடர்ந்தும் அணுகுதல் நிறுத்தப்படும். அதன்பின்னர், குறிப்பிட்ட சித்திரவதை குறித்த விசாரணைகளை

ஆரம்பிக்குமாறும் அது தொடர்பான குற்றவியல் நடபடிமுறைகளை சட்டமா அதிபர் ஆரம்பிப்பதனை சாத்தியப்படுத்துமாறும் நீதவான் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடுதல் வேண்டும்.**(வாசகம் 28)**

- எந்த நீதவானின் முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர்படுத்தப்படுகின்றாரோ அல்லது அடைத்துவகைக்கப்படுகின்றாரோ அந்நீதவான் எவ்வித முன்னறிவித்தலுமின்றி, சந்தேக நபர் அடைத்துவைக்கப்பட்டிருந்த இடத்திற்கு விஜயம் செய்தல் மற்றும் சந்தேக நபரை நேர்காணல் செய்தல் மற்றும் அவருடைய நலனைப் பரிசோதித்தல். **(வாசகம் 32)**

- மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எந்தவொரு அலுவலரும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி, அடைத்துவைப்பு இடங்களுக்கு விஜயம் செய்ய மற்றும் பரிசீலனை செய்ய இயலும், அடைத்துவைப்பு பதிவேடுகள், அடைத்து வைப்பதற்கான ஆணைகள் மற்றும் அவ்விடங்களில் பேணப்படுகின்ற வேறு எவ் ஆவணங்களையும் பரிசீலனை செய்ய இயலும் மற்றும் அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை நேர்காணல் செய்ய இயலும். **(வாசகம் 34)**

- எந்தவொரு நீதவானும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி தடுத்து வைத்திருக்கும் இடங்களுக்கு விஜயம் செய்வதற்கு, அவற்றை பரீட்சிப்பதற்கு மற்றும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களை நேர்காணல் செய்வதற்கு இயலும். **(வாசகம் 35)**

- இரண்டு வாரங்களுக்கு மேலான அடைத்துவைப்பு நீதவானின் அனுமதியுடன் மாத்திரமே அனுமதிக்கப்பட இயலும். **(வாசகம் 36)**

- அதிகபட்சம் எட்டு வாரங்களுக்கு மாத்திரமே அடைத்து வைக்க இயலும். **(வாசகம் 37)**

- அடைத்து வைப்பிற்கான காலப்பகுதியின்போது சந்தேக நபர் ஒவ்வொரு 14 நாட்களுக்கொரு முறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுதல் வேண்டும். **(வாசகம் 39)**

- சந்தேக நபர் மனிதாபிமான முறையில் நடாத்தப்படுதல் வேண்டும். **(வாசகம் 48)**

- நீதவானிடம் மேற்கொள்ளப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மாத்திரமே சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும். மேலும், சந்தேக நபரிடமிருந்து வாக்குமூலமொன்றைப் பதிவு செய்து கொள்வதற்கு முன்பும் மற்றும் பின்பும் சந்தேகநபர் அரசாங்க தடயவியல் மருத்துவ விசேட நிபுணரொருவரால் பரீட்சிக்கப்படவேண்டுமென நீதவான் பணித்தல். **(வாசகம் 80)**

**15. பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் சந்தேக நபர் சட்டத்தரணியொருவரை அணுகுதலை அனுமதிக்கின்றதா?**

ஆம். முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் சந்தேக நபர் சட்டத்தரணியொருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளார் என பல்வேறு வாசகங்கள் குறிப்பிடுகின்றன. எவ்வாறெனினும், இவற்றுள் சில வாசகங்கள் தொடர்பாக பல பிரச்சனைகள் காணப்படுகின்றன (16 ஆவது கேள்வியினைப் பார்க்க).

- நேர்காணல் செய்யப்படவிருக்கின்ற நபர் அல்லது பதிவு செய்யப்படுவதற்கான வாக்குமூலமொன்றை அளிக்கவுள்ள நபருக்கு சட்டத்தரணியொருவரை அணுகுவதற்கான அல்லது சட்டத்தரணியொருவருடன் தொடர்பு கொள்வதற்கான

மற்றும் அந்நேர்காணலிற்கு முன்னர் சட்ட ஆலோசனையினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டு. **(வாசகம் 79(2)(ஆ)**

- சந்தேக நபரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணிக்கு பொலிஸ் பாதுகாவலில் உள்ள சந்தேக நபரை அணுகுவதற்கான உரிமை உண்டு. **(வாசகம் 44)**

- சந்தேக நபரை அடைத்து வைக்கின்ற அல்லது தடுப்புக் காவலில் வைக்கின்ற இடமானது சந்தேக நபரின் குடும்ப உறுப்பினர்களினால் மற்றும் அவருடைய சட்டத்தரணியினால் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முன் அனுமதியின்பேரில் அணுகப்படக்கூடிய இடமாக அமைதல் வேண்டும். **(வாசகம் 48)**

- நேர்காணல் செய்யப்படவிருக்கின்ற நபர் அல்லது பதிவு செய்யப்படுவதற்கான வாக்குமூலமொன்றை அளிக்கவுள்ள நபர் தன்னுடைய தெரிவின்பேரில் சட்டத்தரணியொருவரை அணுகுவதற்கு அல்லது சட்டத்தரணியொருவருடன் தொடர்பு கொள்வதற்கு மற்றும் அந்நேர்காணலிற்கு முன்னர் அவரிடமிருந்து சட்ட ஆலோசனையினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர் ஆவார். **(வாசகம் 54 (3)(அ))**

## கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

**16. முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய வாசகங்கள் யாவை?**

**குற்றங்கள்**

- இச்சட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் அவை மிகப் பரந்தளவில் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் அவை மனித உரிமைகள் தொடர்பான பல கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றன. **வாசகம் 3(3)** இனூடாக, நபரொருவரால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு நடவடிக்கையும் ''*அடிப்படை உரிமைகளின் சட்டரீதியான பிரயோகத்திற்கானது என்ற நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படுகின்றபோது அது குற்றமாகாது*'' என்ற காப்பீடு காணப்படுகின்றபோதிலும், சில குற்றங்கள் தெளிவற்ற முறையில் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையின் பின்னணியினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது அவை துஷ்பிரயோகப்படுத்தப்பட இயலும்.

**இராணுவம் மற்றும் கடலோரப் பாதுகாப்பு படையினரின் கைது மற்றும் அடைத்து வைப்பிற்கான அதிகாரங்கள்**

- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது பிடியாணையின்றி கைது செய்வதற்கான அதிகாரத்தை இராணுவம் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையினருக்கு வழங்குகின்றது **(வாசகம் 17).** இராணவத்தினர் அல்லது கடலோர பாதுகாப்பு படையினரால் ஒரு நபர் கைது செய்யப்படின் அவரை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்கு 24 மணித்தியாலய கால அவகாசம் வழங்கப்படுகின்றது. வேதனைக்குரிய விதத்தில், இது மிக நீண்ட கால அவகாசமாகும். **(வாசகம் 18).**
- **வாசகம் 27 (2)** பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விண்ணப்பிக்கும்போது அல்லது அவருக்கு எவ்விதமான ஆட்சேபனைகளும் இல்லாதபோது மாத்திரமே நீதவான் சந்தேக நபரை விடுவிப்பதற்கு அல்லது பிணை வழங்குவதற்கு உரித்துடையவராவார்.

- அடைத்து வைப்பிற்கான முதல் இரண்டு வார காலப்பகுதியில் எவ்வித நீதிமுறை கண்காணிப்பும் இடம்பெறாது. (**வாசகம் 27 (2)**

- அடைத்து வைப்பிற்கான அதிக பட்ச காலப்பகுதி முடிவடைந்ததும் **வாசகம் 39 (4)** இன்படி நீதவான் சந்தேக நபரை தடுப்புக்காவலில் வைக்கவேண்டும். எவ்வாறெனினும், அத்தகைய சந்தேக நபரை விடுதலை செய்வதற்கான அல்லது பிணை வழங்குவதற்கான அதிகாரம் வெளிப்படையாக நீதவானுக்கு வழங்கப்படவில்லை.

- **41 ஆவது வாசகத்தின்** கீழ் நிர்வாக நிவாரண மேன்முறையீடுகளை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்படுகின்ற மீளாய்வு சபையானது அமைச்சரின் பிரதிநிதிகளையே, அதாவது நிறைவேற்றுத்துறையின் பாகமாக உள்ளவர்களையே பெரும்பான்மை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. ஆகவே, அவர்கள் சுயாதீனமானவர்களா அல்லது பக்கச்சார்பற்றவர்களா என்ற கரிசனை எழுவதுடன் அவர்கள் நீதிமுறை அதிகாரங்களை பிரயோகிக்க இயலுமா அல்லது பிரயோகிக்க தக்கவர்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

**சட்டத்தரணியொருவரை அணுகுவதற்கான மற்றும் நீதியான விளக்கத்திற்கான உரிமைகள்**

- **வாசகம் 44 ஆனது** சந்தேக நபரொருவரை அணுகுவதற்கான உரிமையினை சட்டத்தரணிகளுக்கு வழங்குகின்றபோதும், இவ் உரிமையானது **வாசகம் 48 (1)** இனால் மட்டுப்படுத்தப்படுகின்றது. **வாசகம் 48 (1)** ஆனது அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு பொறுப்பான அலுவலரின் முன் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னர் மாத்திரமே சட்டத்தரணி சந்தேக நபரை அணுக இயலும் என கூறுகின்றது.

- மேலும், **வாசகங்கள் 54 (3) (அ)** மற்றும் **79 (2)(ஆ)** என்பன நேர்காணல் இடம்பெறுவதற்கு ''முன்னர்'' சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மாத்திரமே குறிப்பிடுகின்றன. இதனூடாக நேர்காணலின்போது மற்றும் நேர்காணலின் பின்னர் சட்டத்தரணிக்கான அணுகுதல் மட்டுப்படுத்தப்படுகின்றது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 14(3)(ஈ) ஆனது, ஆரம்பகட்ட பொலிஸ் அடைத்து வைப்பு, விசாரித்தல்கள் மற்றும் விசாரணைகள் உள்ளடங்கலாக குற்றவியல் நடபடிமுறைகளின் அனைத்துக் கட்டங்களிலும் குற்றவாளி சட்டத்தரணிகளை அணுகுவதற்கான உரிமை வழங்கப்பட வேண்டும் என தேவைப்படுத்துகின்றது.

- அடைத்து வைப்பதற்கான காலப்பகுதியை நீட்டித்துக்கொள்ளும் பொருட்டு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தேக நபருக்கு எதிரான குற்றச்சாட்டுகைகள், விசாரணைகளின்மூலம் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் மேலதிக அடைத்து வைப்பு தேவைப்படுவதற்கான காரணங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு இரகசியத்தன்மையுடைய அறிக்கையினை நீதவானுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென **வாசகம் 36** தேவைப்படுத்துகின்றது. இத்தகைய அறிக்கையினை இரகசியமாகப் பேண வேண்டுமென நீதவான் தேவைப்படுத்தப்படுவதுடன், *''அடைத்துவைப்பிற்கான காலத்தின் நீடிப்பை ஆட்சேபிப்பதற்கு தேவையானளவு தகவல்களை''* அணுகுவதற்கு மாத்திரமே சந்தேக நபரின் சட்டத்தரணி அனுமதிக்கப்படுவார்.

- சந்தேக நபருடைய அடைத்துவைப்பு தொடர்பான அனைத்து பொருத்தமான தகவல்களையும் சந்தேக நபரின் சட்டத்தரணி அணுகுதலை உறுதி செய்யத் தவறுகின்றமையானது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சந்தேக நபரின்

உரிமையினை பாரதூரமாக மட்டுப்படுத்துகின்றது. இது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரைகள் 9 மற்றும் 14 இன் கீழான இலங்கையின் கடப்பாடுகளுக்கு முரணாக அமைகின்றது.

**அடைத்து வைப்பதற்கான ஆணைகள்**

- முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் அடைத்து வைப்பதற்கான ஆணைகளை வழங்குவதற்கான அதிகாரம் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆரம்பத்தில் வழங்கப்படுகின்ற அடைத்து வைப்பதற்கான ஆணையானது இரண்டு வருட காலப்பகுதிக்கு வலிதுடையதாகும் என்பதுடன் அது எவ்வித நீதிமுறை கண்காணிப்பிற்கும் உட்படுத்தப்படுவதில்லை என்பது கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றது.
- அடைத்து வைப்பதற்கான ஆணைக்கு எதிரான மேன்முறையீடுகள் நீதிமுறை சாராத ஒரு அமைப்பினால் கையாளப்படுகின்றது: ''மீளாய்விற்கான சபை'' **வாசகம் 41** இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கேள்வி இலக்கம் 16 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி மீளாய்வு சபையானது அமைச்சின் உறுப்பினர்களையே பெரும்பான்மை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. ஆகவே, அவர்கள் சுயாதீனமானவர்களா அல்லது பக்கச்சார்பற்றவர்களா என்ற கரிசனை எழுவதுடன் அவர்கள் நீதிமுறை அதிகாரங்களை பிரயோகிக்க இயலுமா அல்லது பிரயோகிக்கத் தக்கவர்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

**பொதுமக்களின் பாதுகாப்பிற்காக வழிகாட்டல்களை வழங்குவதற்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்**

- **வாசகம் 62(1)(அ) முதல் (ஏ)** வரையான வாசகங்களில், சிரேஷ்ட பொலிஸ் மேற்பார்வையாளர் என்ற பதவிநிலைக்கு கீழ்ப்படாத பதவிநிலைகளைக் கொண்டுள்ள அதிகாரிகள் பொது மக்களுக்கான வழிகாட்டல்களை வழங்கமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் சில வழிகாட்டல்கள் தொடர்பில் மாத்திரமே நீதவானின் முன் அனுமதி தேவைப்படுத்தப்படுகின்றது. *''குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் அல்லது பரப்பிற்குள் உட்செல்லக்கூடாது, குறிப்பிட்ட பாதையில் பயணிக்கக்கூடாது, குறிப்பிட்ட பொது போக்குவரத்து முறையின் செயற்பாடுகளை இடைநிறுத்துதல்''* போன்ற வழிகாட்டல்கள் பொலிஸ் அலுவலரின் சொந்தத் தற்துணிபின்பேரில் வழங்கப்படலாம். இது நடமாடுவதற்கான சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான மற்றும் ஒருங்குசேருவதற்கான சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் மீது பரந்தளவான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். உதாரணமாக, இது போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடுகைகளை தடுக்கும்.

**அமைச்சரின் அதிகாரங்கள்**

- முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது பரந்தளவான பல அதிகாரங்களை அமைச்சருக்கு (சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர்) வழங்குவதற்கான பல ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இத்தகைய அதிகாரங்கள் அமைச்சரினால் மாத்திரம் தனித்து பிரயோகிக்கப்படக்கூடியவை என்பதனால் அவை மனித உரிமைகள் தொடர்பான பாரதூரமான பல கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றன:
  - **வாசகம் 81** இன்கீழ் ஒரு ஒழுங்கமைப்பொன்று சட்டத்தின் கீழான ஏதேனுமொரு தவறை புரிகின்றது அல்லது இலங்கை அல்லது வேறொரு நாட்டின் தேசிய அக்கறைக்கு பங்கம் விளைவிக்கின்ற கூடிய வகையில் செயற்படுகின்றது என நம்புவதற்கான போதுமான காரணங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், அமைச்சர் அத்தகைய ஒழுங்கமைப்புக்களைத் தடை செய்வதற்கான **தடையாணைகளை** வழங்க இயலும். தடையாணைகள் வழங்கப்பட்ட பின்பு பாதிக்கப்பட்ட தரப்பின்

விண்ணப்பத்தின்பேரில் தடையாணைகள் மற்றும் அவற்றின் நீடிப்புக்கள் என்பன அமைச்சரினால் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட முடியும். முன்மொழியப்பட்டுள்ள தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபில் காணப்படுகின்ற மிகவும் பின்னடைவான மற்றும் கரிசனை கொள்ளத்தக்க ஏற்பாடாக இது காணப்படுகின்றது.

- **82 ஆவது வாசகத்தின்கீழ்**, பொலிஸ்மா அதிபரின் பரிந்துரையின்பேரில் மற்றும் மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன் "**கட்டுப்பாட்டு ஆணையினை**" வழங்குதல். சட்டத்தின் கீழான குற்றமொன்றை புரிந்துள்ளார் அல்லது புரிவதற்கு முயற்சி செய்கின்றார் என அமைச்சர் சந்தேகிக்கின்ற எந்தவொரு நபர் தொடர்பிலும் "கட்டுப்பாட்டு ஆணை" வழங்கப்படலாம். கட்டுப்பாட்டு ஆணை இலங்கைக்குள் மற்றும் இலங்கைக்கு வெளியே நடமாடுவதற்கான ஒரு நபரின் இயலுமையினை மட்டுப்படுத்துகின்றது.

- **வாசகம் 84** இன் கீழ் பொலிஸ்மா அதிபர் அல்லது ஆயுதப்படைகளின் தளபதி அல்லது கடலோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் என்போருடைய பரிந்துரையின்பேரில் எந்தவொரு இடத்தை அல்லது அமைவிடத்தை "**தடை செய்யப்பட்ட பிரதேசமாக**" பிரகடனப்படுத்தல். அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு பொறுப்பதிகாரி அல்லது அலுவலர் தடை செய்யப்பட்ட பிரதேசங்களுக்குள் உள்நுழைவதற்கான அனுமதியினை யார் கொண்டுள்ளார்கள் என குறிப்பிடுவார்.

**ஊரடங்கு கட்டளைகள்**

- பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் பிரிவு 16 இல் ஜனாதிபதிக்கு காணப்படுகின்ற அதே அதிகாரங்கள் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்றன. **வாசகம் 83** ஆனது, ஜனாதிபதி தானாக அல்லது அமைச்சரின் விதந்துரையின்பேரில் இலங்கை முழுவதிலும் அல்லது அதன் ஒரு பகுதியில் ஊரடங்கு உத்தரவை பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரத்தை வழங்குகின்றது.
- பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின்கீழ் ஜனாதிபதிக்கு காணப்படுகின்ற அதிகாரங்களானவை மட்டுப்படுத்தப்பட்டனவாக அல்லது நடபடிமுறைசார் அல்லது மெய்யுறுதியான எல்லைகளைக் கொண்டனவாக மற்றும் மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு பொறிமுறைகளைக் கொண்டனவாக கட்டமைக்கப்படவில்லை. எவ்வாறெனினும், அவ் ரீதியில் கட்டமைக்கப்படுதலே தற்போதைய நவீன அரசியலமைப்பு ஜனநாயகங்களின் தரநிலையாக உள்ளது. ஆகவே, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின்கீழ் ஜனாதிபதிக்கு காணப்படுகின்ற அதிகாரங்களைப்போன்ற அதே அதிகாரங்களை துஷ்பிரயோகப்படுத்தப்படுவதற்கு எதிரான எவ்வித பாதுகாப்பு பொறிமுறைகளுமின்றி ஜனாதிபதிக்கு வழங்குதல் உகந்ததல்ல. மேலும், எதிர்கால பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் அளிக்கப்படுகின்ற அதிகாரங்கள் யாவும் பொதுவானவை, நிரந்தரமானவை மற்றும் எந்நேரத்திலும் நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கும் ஒருவருக்கு கிடைக்கக்கூடியனவாகும். ஏனெனில், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டமானது குறிப்பிட்ட ஒரு பிரகடனத்தினூடாக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் கொண்டுவரப்பட்டதென்பதனால் அதன்பின்னரான அதன் நீடிப்புக்கள் பாராளுமன்ற அனுமதிக்கு உட்பட்டிருக்கும் என்பதுடன் குறைந்தளவில் கருத்தேற்புரீதியாகவேனும் அதன்கீழான அவசரகால நிலைமைகளின்போதான அதிகாரங்கள் பாராளுமன்ற கண்காணிப்பிற்கு உட்பட்டதாகக் காணப்படும். வேறு வகையில் கூறுவோமாயின், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின்

கீழுள்ள அதிகாரங்களை அணுகுவது சில பாதுகாப்பு பொறிமுறைகளுக்கு உட்படுகின்றவேளை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழுள்ள அதிகாரங்களை அணுகுவது தொடர்பில் எவ்வித பாதுகாப்புக்களும் காணப்படுவதில்லை. ஆகவே, பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் காணப்படுகின்ற விதிவிலக்கான அரசரகால அதிகாரங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதைனக் காட்டிலும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் சாதாரண பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்கான காப்பீடுகள் உறுதியாக இடம்பெற வேண்டியது அவசியமாகும்.

**குற்றப்பத்திரங்களை இடைநிறுத்துவதற்கான, தாமதப்படுத்துவதற்கான மற்றும் மீளப்பெறுவதற்கான சட்டமா அதிபரின் அதிகாரங்கள்**

- முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் **வாசகங்கள் 72 (1)** மற்றும் **77(1)** என்பன மேல் நீதிமன்றத்தில் விளக்கமொன்று இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் எந்தவொரு குற்றப்பத்திரத்தினையும் இடைநிறுத்துவதற்கான, தாமதப்படுத்துவதற்கான மற்றும் மீளப்பெறுவதற்கான அதிகாரத்தை சட்டமா அதிபர் கொண்டிருப்பார் என கூறுகின்றன. இப்பிரிவின்கீழ், சட்டமா அதிபர் குற்றவியல் நடவடிக்கைகளுக்கான வழக்கொன்றினை ஐந்து வருடங்களுக்கு குறையாத காலப்பகுதிக்கு மற்றும் பத்து வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தமுடியும் அல்லது தாமதப்படுத்தமுடியும்.
- இவ்வாசகங்கள் பல காரணங்களினால் சிக்கலானவையாகக் காணப்படுகின்றன. முதலாவதாக, மேல்நீதிமன்றமானது குற்றத்தை நிரூபிக்காமல் அல்லது நீதியான விளக்கமொன்றினை நடத்தாமல் சந்தேக நபர் தொடர்பில் புனருத்தாபன நிகழ்ச்சித்திட்டமொன்றை மேற்கொள்வதற்கு இயலுமானதாகின்றது **(வாசகம் 94 (2) (ஈ)).** மறு புறத்தில், ஒரு சந்தேக நபர் ''சந்தேக நபர்'' என்ற நிலைப்பாட்டுடனும் மற்றும் அவருக்கெதிரான புதிய குற்றச்சாட்டுகைகள் கொண்டுவரப்படக்கூடிய சாத்தியப்பாட்டுடனும் பத்து வருடங்கள் வைத்திருக்கப்படலாம்.

**திருத்தத்திற்கான பகுதிகள்**

17. **துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்படக்கூடிய பாதுகாப்பு பொறிமுறைகள் யாவை?**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபைப் பலப்படுத்துவதற்கான பல்வேறு பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு ஏற்பாடுகள் உட்சேர்க்கப்படலாம். அவை கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன:

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தினைப் பலப்படுத்துவதற்கான பல சொற்பிரயோக திருத்தங்களை விதந்துரைத்திருந்தது என்பதுடன் அவற்றை சர்வதேச உறவுகளுக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு சமர்ப்பித்திருந்தது. இவ்விதந்துரைகள் மூன்று பிரதான இலக்குகளைக் கொண்டனவாக உள்ளன: (அ) இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றுத் தற்துணிபின் பிரயோகத்தினை குறிக்கோள்ரீதியாக, சட்டரீதியாக, தர்க்கரீதியாக, நியாயரீதியாக மற்றும் விகிதாசார அடிப்படையில் மேற்கொள்ளத்தக்கவிதத்தில் நியதிச்சட்ட மொழியானது அதிகாரங்களை வழங்குகின்ற ஏற்பாடுகளை வடிவமைத்துள்ளது என்பதனை உறுதிப்படுத்தல்; (ஆ) நியதிச்சட்ட மொழியின் பொருட்கோடல் முயற்சிகளானவை சட்டத்தின் குறிக்கோள்களுக்கு சார்பானதாக அமைவதை உறுதிப்படுத்தல்; மற்றும் இறுதியாக (ஈ) சட்டத்தின் கீழான அதிகாரங்களின் பிரயோகம் தொடர்பில் நீதிமுறை மற்றும் பாராளுமன்ற கண்காணிப்பினை மேம்படுத்தல்.

- சட்டத்தின் அமுலாக்கமானது முழுமையாக மற்றும் கட்டாயமாக ஒவ்வொரு வருடமும் மீளாய்வு செய்யப்படுவதனைத் தேவைப்படுத்துகின்ற வாசகமொன்று

உட்சேர்க்கப்பட வேண்டுமென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் விதந்துரைக்கின்றது. அத்தகைய மீளாய்வினை பொருத்தமான துறைசார் மேற்பார்வைக் குழு மேற்கொள்ள இயலும் என்பதுடன் அவ்வறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டுமென்பதுடன் பொது மக்கள் பார்ப்பதற்காக பகிரங்கப்பரப்பில் இடப்பட வேண்டும். சட்டத்தின் அமுலாக்கத்தில் அடிப்படை உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பாக அவ்வறிக்கையில் அவதானிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதுடன், சட்டத்திற்கு அவசியமான திருத்தங்கள் உள்ளடங்கலாக அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதனை மேம்படுத்திக் கொள்வதற்கான விதந்துரைகளையும் அது உள்ளடக்கியிருக்க வேண்டும்.

- இச்சட்டத்தின்கீழான நிறைவேற்று தற்துணிபின் பிரயோகத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் அல்லது வேறேதேனும் தீர்மானங்களையும், அவை அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் இணங்குகின்ற தன்மையினை எடுத்துரைக்கின்ற அறிக்கையொன்றினையும் அமைச்சர் பொருத்தமான துறைசார் மேற்பார்வைக்குழு மற்றும் பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்பட வேண்டுமென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் விதந்துரைக்கின்றது. அமைச்சர் பொருத்தமான துறைசார் மேற்பார்வைக்குழு மற்றும் பாராளுமன்றத்தின் முன்னிலையில் இவற்றை சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதி சட்டத்தில் குறிப்பிடப்பட இயலும். எவ்வாறெனினும், இச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனுமொரு நடவடிக்கை தொடர்பாக அமைச்சரை (அல்லது யாரேனுமொரு அலுவலரை) எந்நேரத்திலும் அழைப்பதற்கு துறைசார் மேற்பார்வைக்குழுவிற்கு காணப்படுகின்ற பொதுவான அதிகாரத்திற்கு இது பங்கம் விளைவிக்கக்கூடாது.

**18. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் சுயாதீன மீளாய்விற்கான பொறிமுறையொன்று உட்சேர்க்கப்பட வேண்டுமா? எவ்வடிவில்?**

- ஆம். அரசியலமைப்பு பேரவையினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய, பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுகின்ற சுயாதீன மீளாய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் விதந்துரைக்கின்றது. சட்டத்தின் அமுலாக்கத்தினை சுயாதீனமாக மீளாய்வு செய்யக்கூடிய, குற்றவியல் நீதி, சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் மனித உரிமைகள் போன்ற துறைகளில் நிபுணத்துவமுடைய சுயாதீன செயற்பாட்டாளர்களை உள்ளடக்கியதாக இம் மீளாய்வு குழு அமைதல் வேண்டும். இம்மீளாய்வுக்குழுவானது வருடத்திற்கு ஒரு முறை அல்லது அவசியமான சந்தர்ப்பங்களில் (உதாரணமாக குறிப்பிட்ட சட்டம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற காலத்தில் அல்லது அதன்பின்னர்) பாராளுமன்றத்திற்கு பகிரங்கமாக அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், பாராளுமன்றம் சுயாதீன மீளாய்வுக் குழுவின் அறிக்கைகளை விவாதிப்பதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.